22.01.2026
MCOP.24/2025
<u>ம.சா.1. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

நான் விபத்திற்கு முன்பு என்ன வேலை பார்த்தேன் என்றால் விவசாய வேலை பார்த்து வந்தேன். எனக்கு மாத வருமானம் எவ்வளவு வரும் என்றால் சுமார் 20,000. எனது வருமானத்தை குறித்து மனுவுடன் ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. விபத்து எப்பொழுது நடந்தது என்றால் 04.08.2017-ல் மாலை 3.00 மணியளவில் ECR சாலையில் உள்ள பாமணி பாலம் அருகில் விபத்து ஏற்பட்டது. நான் சம்பவ நாளில் எந்த வாகனத்தில் சென்றேன் என்றால் இருசக்கர மோட்டார் வாகனத்தில் சென்றேன். நான் தலைக்கசவம் அணிந்துதான் சென்றேன். நான் சென்ற ECR சாலையானது நான்கு புறமும் செல்லக்கூடிய சாலையா என்றால் இல்லை நேராகா செல்லும் சாலைதான். நான் திருத்துறைப்பூண்டியிலிருந்து கிழக்கு நோக்கி சென்று அத்திமடை பள்ளிவாசல் பேருந்து நிறுத்ததிலிருந்து வாகனத்தை திருப்பி தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்ற போது விபத்து ஏற்பட்டது. எனது வண்டியின் மீது மோதிய வாகனத்தின் பெயர் மற்றும் பதிவெண் தெரியுமா என்றால் பொலிரோ மேக்ஸ், பதிவு எண்.TN 50 L 8559. மேற்படி வாகனம் என் வண்டியின் மீது எப்படி மோதியது என்றால் பின்புறமாக வந்து என் வண்டியின் மீது மோதியது. நான் சாலையில் இடது புறமாகதான

சென்று கொண்டிருந்தேன் என்று சொன்னால் சரிதான். நான் சொல்வது போல் சாலையில் இடது புறமாக செல்லவில்லை என்றும், சாலையில் நடுப்பகுதியில் சென்றதாலும், எனது பின் புறத்தில் வந்த வாகனம் முறையாக வந்து ஒலி ஏழுப்பியும் நான் ஒதுங்காமல் சென்றதால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தில் எனக்கு என்ன காயங்கள் ஏற்பட்டது என்றால் வலது பக்க தலைப்பகுதியில் கண்ணிய காயம், வலது கால் முட்டி காயம், வலது மணிகட்டில் காயம்,  மற்றும் இடுப்பு பகுதியில் உள் காயம் ஏற்பட்டது. சம்பவ நாளில் நான் தலைகசவம் அணிந்திருந்தால் தலைப்பகுதியில் காயம் ஏற்பட்டிருக்காது என்றும் நான் தலைகவசம் அணியமால் சென்றதால் தான் காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்து ஏற்பட்டவுடன் முதல் உதவி சிகிச்சை எந்த மருத்துவமனையில் எடுத்து கொண்டேன் என்றால் திருத்துறைப்பூண்டியில் உள்ள அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று மறுநாள் மருத்துவர் அறிவுரை படி தஞ்சாவூர் அரசு பொது மருத்துவமனைக்கு பொது சிகிச்சைக்காக சென்றேன். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு அறுவைசிகிச்சை ஏதேனும் செய்யப்பட்டதா என்றால் இல்லை. தையல் மட்டும் போடப்பட்டது. 08.08.2017–தேதிக்கு பிறகு நான் தஞ்சாவூரில் உள்ள நரம்பியல் மருத்துவர் அங்குராஜ் என்பவரிடம் நாளது தேதி வரை சிகிச்சை பெற்று வருகிறேன். நான் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கு மருத்துவ பில்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு

முறையாக ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் சரியாக தான் சாலை விதிகளை அனுசரித்து அதன் ஓட்டுநர் சென்றார் என்றும் நான் சாலையில் நடுப்பகுதியில் சென்றதாலும், 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் ஆரன் அடித்தும் நான் ஓரமாக செல்லாமல் சென்றதால் தான் இந்த விபத்து ஏற்ட்டது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்ப காயங்கள் என்றும், மருத்துவ சிகிச்சையால் தற்போது குணமடைந்துவிட்டது என்றும், நான் எந்த அறுவைசிகிசையும் செய்ய வில்லை என்றும், கூடுதல் நஷ்ட ஈடு தொகை பெற வேண்டி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எனக்கு ஏற்பட்ட இழப்பிற்கு 1ம் எதிர்மனுதாரர் தான் நஷ்டஈடு தொகை கொடுக்க  கடைமை பட்டவர் என்றும், 2ம் எதிர்மனுதார் நிறுவனம் நஷ்டஈடு தொகை கொடுக்க கடைமைபட்டவர் அல்ல சொன்னால் சரியல்ல. நான் ெஹல்த் இன்சூரன்ஸ் போட்டுள்ளேனா என்றால் இல்லை. வாகனத்திற்கு காப்பீடு பாலிசி உள்ளது. எனது வாகனத்தின் காப்பீடு நிறுவனத்தை இந்த வழக்கில் சேர்க்காததால் எனது மனு தள்ளுப்படி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை:-</u>**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.